**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 186, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**186—**

## தேரோட்டம்

***5578—திரு. கே. குப்பன்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவொற்றியூர் தொகுதி, அருள்மிகு தியாகராஜசுவாமி-வடிவுடையம்மன் கோயிலில் தேரோட்டம் நடத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) சென்னை, திருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜசுவாமி வடிவுடையம்மன் திருக்கோயிலில் கடந்த 1942 ஆம் ஆண்டு தேரோட்டம் நடைபெற்றது. அதன் பின்னர், கிட்டத்தட்ட 70 ஆண்டுக் காலம் தேரோட்டம் நடைபெறவில்லை. திருவிழாக் காலங்களில் தேரோட்டம் நடத்த வேண்டிய அவசியத்தைக் கருதியும், பக்தர்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும்விதமாகவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிதாக மரத் தேர் செய்வதற்காக அரசு நிதியாக 40 இலட்சம் ரூபாயும், பொது மக்கள் நன்கொடையாக 6 இலட்சம் ரூபாயும் அளித்து, திருத்தேர் செய்யும் பணியைத் தொடங்க ஆணையிட்டுள்ளார்கள்.*

*மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையைச் செயல்படுத்தும்விதமாக, திருத்தேர் செய்யும் பணியை ஆறு மாத*

காலத்திற்குள் நிறைவு செய்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் தேரோட்டம் நடத்தப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள்.*

**திரு. கே. குப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள 7 கோடி தமிழக மக்களின் நெஞ்சங்களிலே நீங்காத இடம் பெற்றிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதல்வர் தங்கத் தலைவி, எங்களுடைய இதய தெய்வம், அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 70 ஆண்டுகளாகத் தேரோட்டம் நடத்தப்படாமலிருந்த நிலையை அறிந்து, 46 இலட்சம் ரூபாயை ஒதுக்கிக் கொடுத்து, இன்றைக்குத் தேரோட்டம் நடத்துவதற்கு உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய நன்றியைத் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அதேநேரத்தில், புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரை, தியாகராஜசுவாமி வடிவுடையம்மன் ஆலயத்திற்குக் குடமுழுக்கு நடத்துவதற்கும், திருக்குளத்திலே தெப்பம் விடுவதற்கும், தேரோட்டம் நடத்துவதற்கும் உத்தரவிட்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் தொகுதி மக்களின் சார்பாக மீண்டும் மீண்டும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள் விடைகள் முடிவுற்றன.*

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*